ஹோமியோபதி கவுன்சிலால் அங்கீகரிக்கப்பட்ட பட்டங்கள்.

43—(* வினா எண் 12350) திரு. செ. செம்மலை : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு ஹோமியோபதி கவுன்சிலால் அங்கீகரிக்கப்பட்ட D.H.M.S. முதலிய பட்டங்கள் தமிழ்நாடு அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவா ?

(ஆ) இல்லை எனில், அவற்றை அங்கீகரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) ஓமியோபதி கவுன்சிலின் நடவடிக்கையில் உள்ளது.

வயதான சித்த மருத்துவர்களுக்கு ஓய்வூதியம்.

44—(* வினா எண் 12390) டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள வயதான சித்த மருத்துவர்களுக்கு ஓய்வூதியம் அளிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்த அடிப்படையில் வழங்கப்படும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) 60 வயதிற்கு மேற்பட்ட வயது முதிர்ந்த சித்த மருத்துவர்களுக்கு கீழ்க்கண்ட தகுதி அடிப்படையில், ஓய்வூதியம் மாதம் ரூ. 150 (ரூபாய் நூற்று ஐம்பது மட்டும்) வழங்கப்படுகிறது.

1. பயனடையும் பரம்பரை சித்த மருத்துவர்கள் 'பி' அல்லது 'சி' வகுப்பு பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

2. வேலை செய்ய முடியாத அளவிற்கு உடல் நலம் குன்றியிருக்க வேண்டும்.

3. ஆண்டு வருமானம் ரூ. 3,600-க்கும் (ரூபாய் மூவாயிரத்து அறுநூறு) குறைவாக இருக்க வேண்டும்.

1987 நவம்பர் 11]

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும், அந்த மாவட்டம் தாய் தமிழகத்தோடு இணைவதற்கு முன்பு கேரளாவுடன் இணைந்து இருந்த காரணத்தாலே, அந்த மாவட்டத்திலே இருந்த பெருவாரியான சித்த மருத்துவர்கள் கேரளாவிலே பதிவு செய்திருக்கிறார்கள். அந்தப் பதிவு அடிப்படையில் இங்கே மனு செய்கிற நேரத்தில், அவர்கள் கேரளாவிலே பதிவு செய்திருக்கிற காரணத்தாலே உதவித் தொகை வழங்க இயலாது என்று தெரிவிக்கிறார்கள். ஆகவே அந்த மாநிலத்திலே செய்திருக்கும் பதிவுகளை அங்கீகரித்து, அவர்களுக்கும் இந்தச் சலுகை வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொரு மாநிலத்திலே பதிவு செய்தவர்களுக்கு நாம் இங்கே ஓய்வு ஊதியம் அளிப்பது என்று சொன்னால், அது வேறு மாநிலங்களிலே இருப்பவர்களுக்கு இங்கே வந்து ஓய்வு ஊதியம் பெறுவதற்கு வாய்ப்பாக அமைந்து விடும். எனவே தமிழ்நாட்டில் பதிவு செய்தவர்களுக்காகத்தான் ஓய்வு ஊதியம் பெறுவதற்கு சட்டம் வகுத்திருக்கிறோம். எனவே வேறு மாநிலங்களிலே பதிவு செய்திருப்பவர்களைப்பற்றி இப்போது பரிசீலிக்க இயலாது.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மற்ற மாநிலங்களிலே உள்ளவர்களைப்பற்றி பேசவில்லை. ஒரு காலத்திலே நாங்கள் கேரளாவுடன் இருந்த காரணத்தாலே அந்தப் பாவத்திலே இருந்து விடுபட்டு வந்து விட்டோம். ஆகவே நீங்கள் புண்ணியமாக தத்து எடுத்து, அங்கே பதிவு செய்திருந்தாலும் உதவி தரவேண்டும் என்று கேட்கிற நேரத்தில், வெளி மாநிலங்களிலே பதிவு செய்திருந்தால் தர முடியாது என்று ஒட்டுமொத்தமாக அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொல்லாமல் கருணை கூர்ந்து —எங்கு பதிவு செய்திருந்தாலும் தர வேண்டும் என்று நான் சொல்லவும் இல்லை—எங்கள் மாவட்டத்திற்கு மட்டும், அதுவும் அது கேரளாவிலே இருந்து இங்கே வந்து சேர்ந்த காரணத்தாலே

அதைத் தண்டிக்கக் கூடிய விதத்தில் அமைந்து விடாமல் அங்கே பதிவு செய்தவர்களுக்கும் ஓய்வு ஊதியம் தர மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரளாவிலே முதலிலே இருந்தது பாவம் என்று நண்பர் சொல்லக் கூடாது. இங்கே வந்ததற்காக மகிழ்ச்சி அடைகிறோம், இணைந்ததற்காகப் பாராட்டுகிறோம், வாழ்த்து கிறோம். இங்கே வந்து விட்டார்கள் என்பதற்காக அரசு தண்டிக்கவும் இல்லை. இந்த மாநிலத்திலே அவர்கள் பதிவு செய்யவில்லை என்றுதான் நான் சொன்னேன். இந்த மாநிலத்திலே பதிவு செய்கிறவர்களுக்குத்தான் ஓய்வு ஊதியம் வழங்குவதற்கு அரசு வழி வகைகள் வகுத்திருக்கிறது. வெளி மாநிலத்திலே பதிவு செய்தவர்களுக்கு ஓய்வு ஊதியம் தர அரசின் விதி முறைகள் இடம் தரவில்லை என்றுதான் நான் தெரிவித்தேன்.

தலைமைச் செயலகத்தில் இணைப்புக் கட்டிடம் கட்டுதல்.

45—(* வினா எண் 6104) **திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைமைச் செயலகத்தில் துறைகள் விரிவாக்கப் பட்டதின் விளைவாக புதிய பலமாடிக் கட்டிடத்திற்கு இணையாக கட்டிடம் ஒன்றினைக் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஆம். இக்கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் செயல்பட அரசாங்கம் அதற்குத் திட்ட மதிப்பீடு என்று எவ்வளவு வைத்திருக்கிறது? எத்தனை காலத்திற்குள் இந்தப் பணியை முடிக்க அரசு எண்ணியுள்ளது என நான் அறிய விரும்புகிறேன்.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS